பிராஜ்சி/கெட்டி படங்கள்

# மரியாதைக்குரிய உறவுகள் கல்வி

Student Wellbeing Hub

## பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களுக்கான ஒரு வழிகாட்டி

ஒரு பெற்றோர் என்ற முறையில், உங்களது குழந்தையானது பள்ளியிலும் தனது வாழ்க்கை முழுவதும் நேர்மறையான அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்கள். அவர்கள் ஆரோக்கியமான உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், தனக்கு ஆதரவு உள்ளதாக உணரவும், கற்றுக்கொள்வதற்கும் வளர்வதற்கும் தேவையான அனைத்து வாய்ப்புகளுக்கான வசதியை அவர்கள் பெற்றிடவும் எனவும் நீங்கள் விரும்புகிறீர்கள். அவர்கள் தங்களை தாங்களே மதிப்பவர்களாகவும், மற்றவர்கள் மீது மரியாதை வைத்திருப்பவர்களாகவும், மதிக்கப்படவும் நீங்கள் விரும்புகிறீர்கள்.

மரியாதை மற்றும் மரியாதைக்குரிய உறவுகள் குறித்து குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் கற்பிப்பதில் பள்ளிகளுடன் இணைந்து பெற்றோர்கள் ஒரு முக்கியப் பங்கினை வகிக்கிறார்கள். மரியாதைக்குரிய உறவுகள் கல்வியானது தங்கள் குழந்தைகள் மற்றவர்களுடன் நேர்மறையாகத் தொடர்புகொள்ளவும், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது மரியாதைக்குரிய உறவுகளை உருவாக்குவதற்கும் உதவுவதற்கு குடும்பங்களுக்கு ஆதரவளிக்கிறது.

## மரியாதைக்குரிய உறவுகள் கல்வி என்றால் என்ன?

மரியாதைக்குரிய உறவுகள் கல்வி என்பது நமது சமுதாயங்களில் மரியாதைக்குரிய உறவுகளை உருவாக்கி அவற்றைத் தொடர்ந்து பராமரிப்பதற்குத் தேவையான திறன்களை வளர்ப்பதற்கு மாணவர்களுக்கு ஆதரவளிக்கின்ற ஒரு பள்ளி சார்ந்த திட்டம் ஆகும்.

மரியாதைக்குரிய உறவுகள் கல்வியைக் கற்பிக்கின்ற பள்ளிகளானது, தங்களது பள்ளிச் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் சமமாக மரியாதையளிக்கப்படுவதற்கும், மதிப்பளிக்கப்படுவதற்கும், நடத்தப்படுவதற்குமான உரிமையைக் கொண்டிருப்பதாக நம்புகின்றன.

### பாடத்திட்டத்தில் மரியாதைக்குரிய உறவுகள் கல்வி

மரியாதைக்குரிய உறவுகள் கல்வியானது Australian Curriculum அனைத்து வகுப்புகளிலும் சேர்க்கப்பட்டுள்ளது. அது, பின்வருவன உள்பட, பல்வேறு வழிகளில் கற்பிக்கப்படலாம்:

- உங்கள் குழந்தையின் தொடக்கப் பள்ளி வகுப்பறையில்
- தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளி இரண்டிலும் உடல்நலம் மற்றும் உடற்கல்வி வகுப்புகளில்
- உயர்நிலைப் பள்ளியில் மாணவர் பராமரிப்பு வகுப்புகள் வாயிலாக
- சிறப்பு நாட்கள் மற்றும் மாணவர் தலைமையிலான செயல்பாடுகள் வாயிலாக

Education Services Australia

© 2019 Commonwealth of Australia or Education Services Australia Ltd, unless otherwise indicated. Creative Commons BY 4.0, unless otherwise indicated. Student Wellbeing Hub is funded by the Australian Government Department of Education.

cc BY

# மரியாதைக்குரிய உறவுகள் கல்வியில் மாணவர்கள் என்ன கற்றுக்கொள்கிறார்கள்?

மரியாதைக்குரிய உறவுகள் கல்வியானது, பரந்த அளவிலான சமூகச் சூழ்நிலைகளில் மக்களுடன் நேர்மறையாகவும் மரியாதையுடனும் தொடர்புகொள்வதற்கு மாணவர்களுக்குத் தேவைப்படுகின்ற திறன்கள் மற்றும் புரிதலை வளர்க்கிறது.

## பொதுவான தலைப்புகள்

மரியாதைக்குரிய உறவுகள் கல்வியானது ஒவ்வொரு மாநிலத்திலும் மாகாணத்திலும் வெவ்வேறு விதமாக கற்பிக்கப்படலாம், ஆனால் பொதுவான தலைப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- தனிப்பட்ட பாதுகாப்பு
- சமாளிக்கும் திறன்கள்
- நண்பர்களை ஏற்படுத்துதல் மற்றும் கருத்துவேறுபாடுகளைத் தீர்த்தல்
- உங்கள் உணர்ச்சிகளை நிர்வகித்தல்
- தகவல்தொடர்புத் திறன்களை வளர்த்தல்.

## புரிதல்கள் மற்றும் திறன்கள்

மரியாதைக்குரிய உறவுகள் கல்வியின் ஒரு பகுதியாக, தங்களுடைய உறவுகள் அனைத்தையும் பரஸ்பர மரியாதை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் கொண்டிருப்பதன் முக்கியத்துவம், அவர்களுடைய உணர்வுகளை எப்படி நிர்வகிப்பது மற்றும் அவர்கள் மனக்கலக்கமாக உணரும்போது உதவியும் ஆதரவும் கோருவதற்கான வழிகள் ஆகியவற்றைப் பற்றி மாணவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

மேலும், மரியாதைக்குரிய உறவுகள் கல்வியானது சிறுவர்கள் மற்றும் சிறுமிகளுக்கு கொடுமைப்படுத்தல் மற்றும் வன்முறைக்கான காரணங்களை ஆராய்கிறது. எதிர்மறையான பாலின நிலைப்பாடுகள் மற்றும் பாலின சமத்துவமின்மை ஆகியவை நாம் ஒருவரையொருவர் பார்க்கும் விதத்திலும், நடத்தும் விதத்திலும் கொண்டிருக்கும் தாக்கங்கள் குறித்து மாணவர்கள் அறிந்துகொள்ள இது உதவுகிறது.

Education Services Australia

© 2019 Commonwealth of Australia or Education Services Australia Ltd, unless otherwise indicated. Creative Commons BY 4.0, unless otherwise indicated. Student Wellbeing Hub is funded by the Australian Government Department of Education.

## மரியாதைக்குரிய உறவுகள் கல்விக்கு பெற்றோர்கள் மற்றும் குடும்பங்கள் எப்படி ஆதரவளிக்க முடியும்?

பள்ளிகள் இந்த வேலையைத் தனியாகச் செய்ய முடியாது. மரியாதை மற்றும் மரியாதைக்குரிய உறவுகள் குறித்து குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் கற்பிப்பதில் பெற்றோர்கள் முதலாவது மற்றும் மிகவும் தாக்கம் ஏற்படுத்தும் பங்கை வகிக்கின்றனர். நேர்மறையான நடத்தைக்கு முன்மாதிரியாக விளங்குவதன் மூலம் பள்ளியில் உங்கள் குழந்தை கற்றுக்கொண்டவற்றை வீட்டில் நீங்கள் வலுப்படுத்த முடியும்.

## மரியாதைக்குரிய உறவுகள் கல்வி மற்றும் பாலினம்

சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் இருவருமே துஷ்பிரயோகம், கொடுமைப்படுத்தல் மற்றும் இதர வகையான வன்முறைகளால் பாதிக்கப்படுவதற்கான ஆபத்தில் இருக்கலாம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியமாகும். மரியாதைக்குரிய உறவுகள் கல்வி என்பது நமது உறவுகள் அனைத்தும் மிகவும் நேர்மறையானவையாக இருப்பதை உறுதி செய்வது பற்றியதாகும். எனினும், மரியாதைக்குரிய உறவுகள் கல்வியானது பாலின சமத்துவமின்மைப் பிரச்சனையைக் கையாளுவது மற்றும் வன்முறை நோக்கியான மனப்பாண்மைகள் மீது அது கொண்டுள்ள தாக்கம் ஆகியவற்றைப் பற்றியதாகவும் இருக்கிறது.

சிறுமிகள் மற்றும் பெண்களை நோக்கியான அவமரியாதையான நடத்தையானது ஏற்றுக்கொள்ளக் கூடியது எனும் சூழ்நிலைகள் உள்ளதென சிறுவர்களும் சிறுமிகளும் இளம் வயதிலிருந்தே நம்பத் தொடங்கிவிடக்கூடும். சில பெரியவர்கள் எவ்வாறு சிறுவர்களையும் சிறுமிகளையும் வேறுபடுத்திப் பேசுகிறார்கள் என்பதைக் குழந்தைகள் கேட்கிறார்கள், மற்றும் சிறுவர்களும் ஆண்களும் பெண்களை அவமரியாதையாக நடத்துவது சரிதான் என்பதை இந்த உரையாடல்களிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ளக் கூடும். அவமரியாதைக்குரிய நடத்தைகள் மன்னிக்கக்கூடியது அல்லது சாதாரணமானவை என்றும் கூட நம் குழந்தைகளை நினைக்கச் செய்யும் விஷயங்களை நாம் சில நேரங்களில், நம்மை அறியாமலேயே, சொல்லவும் செய்யவும் கூடும்.

கடுமையான அல்லது ஆக்ரோஷமான நடத்தையானது “இது சிறுவர்கள் செய்வதுதான்” என்று நாம் சிறுவர்களுக்கு கற்றுக் கொடுத்தால், அவர்கள் மற்ற சிறுவர்களிடமும் சிறுமிகளிடமும் இதே வழியில் செயல்படுவார்கள். ஆர்வம் அல்லது பாசத்தைக் காட்டும் ஒரு வடிவமாக சிறுவர்கள் ஆக்ரோஷமாக நடந்துகொள்கிறார்கள் - “ஏனெனில் அவன் உன்னை விரும்புகிறான்” - என சிறுமிகளிடம் சொல்லப்படலாம்.

### அவமரியாதைக்குரிய நடத்தையை மன்னித்தல்

அவமரியாதைக்குரிய நடத்தையை நாம் மன்னிக்கும் சில வழிகள் குறித்து நாம் ஆச்சரியப்படலாம். பின்வருவன அவை உள்ளடக்கும்:

- அவமரியாதைக்குரிய நடத்தையின் விளைவுகளைக் குறித்து பெரிதுபடுத்தாமல் விடுதல்
- ஆக்ரோஷமானது ஆணாக இருப்பதன் ஒரு பகுதி என்று ஏற்றுக்கொள்ளுதல்
- பெண்கள் அனுபவிக்கும் எந்த ஒரு துஷ்பிரயோகத்துக்கும் அவர்களே ஏற்படுத்துவதாக அல்லது பங்களிப்பதாக குற்றம் சாட்டுதல்.

படிப்படியாக, அவமரியாதை என்பது உறவுகளின் ஒரு சாதாரண பகுதி என சிறுவர்களும் சிறுமிகளும் நம்பத் தொடங்கலாம்.

நேர்மறையான மனப்பான்மைகள், நடத்தைகள் மற்றும் பாலின சமத்துவம் நமது சமுதாயத்தில் வலியுறுத்தப்படும்போதும் முன்மாதிரியாக நடந்துக் காட்டும் போதும் மனப்பான்மைகளிலும் நடத்தைகளிலும் மாற்றங்களை அடைய முடியும் என்பதை நாம் அறிவோம்.

அவமரியாதையைப் பொறுத்துக்கொள்கின்ற மொழிவழக்கை நீங்கள் இன்னும் உன்னிப்பாகக் கவனிக்க விரும்பினால், Our Watch இணையதளத்தில் The excuse interpreter-ஐ படிக்கவும்.

Education Services Australia

© 2019 Commonwealth of Australia or Education Services Australia Ltd, unless otherwise indicated. Creative Commons BY 4.0, unless otherwise indicated. Student Wellbeing Hub is funded by the Australian Government Department of Education.

## பெற்றோர்களும் குடும்பங்களும் மரியாதை பற்றி எப்படிப் பேசிக்கொள்வார்கள்?

ஒரு பெற்றோராக, மரியாதையான முறையில் எப்படி நடந்துகொள்வது என்பதைப் பற்றி உங்கள் குழந்தையிடம் உரையாடுவதற்கான சூழ்நிலை எப்போது எழக்கூடும் என்பது உங்களுக்கு ஒருபோதும் தெரியாது. பின்தொடர வேண்டிய ஒரு சம்பவத்தை நீங்கள் பார்த்திருக்கலாம் அல்லது வன்முறையைச் சித்தரிக்கும் செய்திக் கதை அல்லது திரைப்படத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். அது எப்போதும் எளிதானது அல்ல, ஆனால் அது ஒரு பயனுள்ள உரையாடலாக இருக்கும். அவமரியாதைக்குரிய நடத்தைக்கு எதிராக நீங்கள் பேசும் ஒவ்வொரு முறையும், மிகவும் மதிப்புக்குரிய சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கி நாம் ஒரு சிறு அடி எடுத்துவைக்கிறோம்.

மரியாதைக்குரிய உறவுகளைப் பற்றி உங்கள் குழந்தையுடன் உரையாடலைத் தொடங்க உங்களுக்கு உதவக்கூடிய ஒரு Conversation guide-ஐ Respect.gov.au வெளியிட்டுள்ளது.

குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும், அவர்கள் பெரிதாய் மதிக்கும் மக்களிடமிருந்து, அதாவது, நீங்கள், அவர்களின் நண்பர்கள், அவர்களின் ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் கதாநாயகர்களைப் போன்ற முன்மாதிரிகளிடமிருந்து, வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. குழந்தைகள் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான மற்றும் மரியாதைக்குரிய உறவுகளைப் கொண்டிருப்பதற்கும், மற்றவர்களைப் புண்படுத்துகின்ற, அச்சுறுத்துகின்ற அல்லது ஒடுக்குகின்ற மனப்பான்மைகளுக்கும் நடத்தைகளுக்கும் எதிராகப் போராடுவதற்கும் தேவையான திறன்களை உருவாக்கிக் கொள்ள உதவுவதில் அனைவருக்கும் பங்கு உண்டு.

## பள்ளியானது என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்களை பெற்றோர்களும் குடும்பங்களும் எங்கு கண்டறிய முடியும்?

மரியாதைக்குரிய உறவுகள் கல்வியை அறிமுகம் செய்வதில் பள்ளிகள் வெவ்வேறு நிலைகளில் இருக்கின்றன. மரியாதைக்குரிய உறவுகள் கல்வியை உங்களது பள்ளியானது எவ்வாறு அணுகுகிறது என்பதைப் பற்றிய விவரங்களுக்கு உங்கள் பள்ளியைத் தொடர்புகொள்ளவும்.

**பள்ளியின் முக்கிய தொடர்பு நபர்:** மரியாதைக்குரிய உறவுகள் கல்வி

**தொடர்பு (தொலைபேசி):**

**தொடர்பு (மின்னஞ்சல்):**

Education Services Australia

© 2019 Commonwealth of Australia or Education Services Australia Ltd, unless otherwise indicated. Creative Commons BY 4.0, unless otherwise indicated. Student Wellbeing Hub is funded by the Australian Government Department of Education.

CC BY